DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-53/2025

Prosecution witness – PW 5

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.ஆறுமுகம் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2 present.)

09.04.2026- 01.00 PM

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் சிறைக்குளம் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 5 கோபாலை தெரியும்.

2. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். 2024ம் வருடம் 7ம் மாதம் ஒரு நாள் சிறைக்குளம் கிராமத்தை சேர்ந்த மேலக்குடியிருப்பு பகுதியில் சண்டை நடந்தது சம்மந்தமாக சிக்கல் போலீசார் சம்பவ இடத்தில் மாலை 05.45 மணியளவில் பார்வை மகஜர் தயார் செய்து வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். சிக்கல் போலீசார் கேட்டுக்கொண்டன் பேரில் கையொப்பம் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: -</u>**

சார்பு ஆய்வாளருக்கும், தலைமைக்காவலருக்கும் எனக்கு வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான் என்னிடம் கையொப்பம் வாங்கியது தலைமைக்காவலர் என்றால் சரிதான். தினகரன் இல்லத்தில் அருகில் தான் என்னிடம் கையொப்பம் வாங்கினார் என்றால் சரிதான். என்னிடம்எத்தனை கையொப்பம் வாங்கினார் என்றால் ஒரே ஒரு

கையொப்பம் வாங்கினார்கள். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் கையொப்பம் செய்து கொடுத்தேன். இந்த வழக்கின் புகார்தாரர் எனக்கு உறவு முறை என்பதால் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து விட்டு சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.04.09 18:34:31 +0000